# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் வாகன நிறுத்துமிடம் மற்றும் கட்டிட இணைப்பு வழிகளுக்கு இழுவிசை துணி கூரை நிழற்குடை கட்டமைப்பு (Tensile Fabric Sheds) வழங்குதல் மற்றும் பொருத்துதல்

### ஒப்பந்த இலக்கம் : TRC/ADM/01/24/03/34 - I

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை) தலைவரினால் கீழ் குறிப்பிட்டுள்ள விபரத்தின் படி, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் வாகன நிறுத்துமிடம் மற்றும் கட்டிட இணைப்பு வழிகளுக்கான இழுவிசை துணி கூரை நிழற்குடை கட்டமைப்பு **(Tensile Fabric Sheds)** வழங்குதல் மற்றும் பொருத்துவதற்கு தகுதிவாய்ந்த மற்றும் தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**வேலைகளின் விடயப்பரப்பு**

வாகன நிறுத்துமிடம் மற்றும் கட்டிட இணைப்பு வழிகளுக்கான இழுவிசை துணி கூரை நிழற்குடை கட்டமைப்பு (Tensile Fabric Sheds) வழங்குதல் மற்றும் பொருத்துதல்.

**அமைவிடம் -** இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08

**கட்டுமான கால எல்லை - 30 நாட்கள்**

1. தேசிய போட்டிசார் விலைமனு கோரல் (NCB) நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகுதி பெற, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலிற்கு உட்பட்டிராத விலைமனுதாரராக இருக்க வேண்டும் அதே வேளை ஏற்றுக் கொள்ளப்பட்ட வியாபார பதிவினை பெற்றிருக்க வேண்டும்.
3. ஒப்பந்தத்தை வழங்க தகுதிப் பெறுவதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகளாவது:
   - கடந்து ஐந்து வருட காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கட்டுமான பணிகளின் வருடாந்த சராசரி மதிப்பு குறைந்தபட்சம் 15 மில்லியன் ரூபாவாக இருத்தல்.
   - கடந்த 05 வருட காலத்தினுள், இந்த விடயத்தின் தன்மைக்கு மற்றும் சிக்கல் தன்மைக்கு நிகரான 15 மில்லியன் ரூபா அல்லது அதனை விட அதிக பெறுமதி கொண்ட குறைந்த பட்சம் ஒரு கட்டுமான பணியை சிறப்பான முறையில் நிறைவு பெற்றிருப்பதன் அனுபவமானது விலைமனுதாரரிடையே இருக்க வேண்டும்.
4. இது தொடர்பான ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு இது பற்றிய மேலதிக விபரங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 என்ற முகவரியில் பெற்றுக் கொள்ள முடியுமென்பதோடு, வேலை நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி வரை இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 என்ற முகவரியில் அமைந்துள்ள தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலனை செய்ய முடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு 2026.08.13 தொடக்கம் 2026.08.25 வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி வரை மீளளிக்கப்படாத விலைமனு கட்டணமாக ரூ.5,000.00 ஐ பணமாக செலுத்தி, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை முன்வைப்பதன் பேரில் ஆங்கில மொழியில் அமைக்கப்பட்ட முழு விலைமனு ஆவணத் தொகுப்பை கொள்வனவு செய்ய முடியும்.
6. விலைமனுவை 2026.08.28 ஆம் திகதி பி.ப.2.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை), இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் கையளிக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் நிறைவு பெற்ற உடன் கலந்து கொள்ள விருப்பமுடைய விலைமனுதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனு திறக்கப்படும்.
7. ஒவ்வொரு விலைமனுவுடனும் ரூ.250,000.00 விலைமனு பிணை ஒன்றை முன்வைக்க வேண்டுமென்றும், அந்த பிணை 2026.08.28 ஆம் திகதி தொடக்கம் 2026.12.11 ஆம் திகதி வரை அமுலில் இருக்க வேண்டும். (அந்த கால வரையறை விலைமனு செல்லுபடியாகும் காலம் நிறைவு பெற்றவுடன் இன்னும் 28 நாட்களுக்கு செல்லுபடியாக இருக்க வேண்டும்.)
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் விலைமனு முன் கூட்டம் 2026.08.20 ஆம் திகதி மு.ப.10.00 க்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இலக்கம்.276,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு - 08.**

**2026.08.13**